[1st August 1966

திரு. து. ப. அழகமுத்து : அங்கு பிரயாணிகள் வந்து பார்ப்ப தற்கு வசதியாக இருக்க அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : போர்ட்ஸ் சாங்க்சுவரி நம் ஸ்டேட்டில் 16 இருக்கின்றன. இதையும் சேர்த்து 16, என்று கணக்கில் வைத்திருக்கிரேம். சமீபத்தில் கூட பார்த்திருக்கலாம். வேடந்தாங்கலில் பல சௌகரியங்கள் செய்து கொடுத்திருக்கிரேம். நான்காவது ப்ளானில் கொஞ்சம் கொஞ்சமாக நிதி ஒதுக்கி பல வேலைகள் செய்யப்படுகின்றன.

Multi-purpose Fisheries Project

*16 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether the Government have proposed to establish a multi-purpose Fisheries Project at Tuticorin ;

(*b*) whether any aid from UNICEF has been sought for in respect of the same; and

(*c*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : தூத்துக்குடியில் இல்லாவிட்டாலும் நம் மாநிலத்தில் வேறு எங்கேயாவது இதுபோன்ற பலநோக்கு மீனளத் திட்டம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுள்ளதா ?

(பதில் இல்லை.)

இயந்திரப் படகுகள்

*17 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இயந்திரப் படகுகளுக்குத் தேவையான சாமான்கள் கிடைப்பதில் சிரமம் இருக்கிறதா ?

(இ) இயந்திரப் படகுகளுக்குத் தேவையான உள்நாட்டு தயாரிப்பு சாமான்கள் வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்களைவிட விலை ஏற்றம் உள்ளதாகவும், வலு குறைந்ததாக வும் இருக்கின்றது என்பது உண்மையா ?

(உ) அப்படியானல் அத்தகைய சாமான்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் என்ஜின்கள் தேவைப்படும் அளவுக்குக் கிடைப்பதில்லை. மீன் பிடி விசைப்படகுகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் செப்பு, பித்தளை உலோகங்களும் வேண்டிய அளவு க்கு உள்நாட்டில் கிடைப்பதில்லை.

1st August 1966]

(இ) சமீப காலம் வரை, உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட என்ஜின்களின் விலை இறக்குமதியாகும் என்ஜின்களின் விலையை விட அதிகமாகவே இருந்தது. ஆனால், உள்நாட்டு என்ஜின்கள் வெளி நாட்டு என்ஜின்களை விடத் தரம் குறைந்தவை என்று சொல்ல முடியாது.

(உ) இந்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி, தேவைப் படும் என்ஜின்களில் 50 சதவீதம் அல்லது தேவைப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதி உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து பெறப்பட வேண்டும். எஞ்சிய பொருள்களை மட்டும் இறக்குமதி செய்ய இந்திய அரசு ஏற்பாடு செய்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் இதுவரை தயாரித்திருக்கக்கூடிய விசைப் படகுகள் எத்தனை? அவற்றில் விநியோகிக்கப்பட்டிருப்பவை எத்தனை? உபயோகத்தில் இருப்பவை எத்தனை? கொடுக்கப்பட்டு பிறகு மாற்றிக் கொடுக்கப்பட வேண்டுமென்று எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? அதற்குரிய காரணங்களை அறியலாமா? என்ஜின்கள் எவ்வளவு வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன? உள்நாட்டில் அப்படிப் பட்ட என்ஜின்கள் இருக்கின்றனவா? அவற்றிற்கு வேண்டிய உபகரணங்கள் உள்நாட்டில் கிடைக்கின்றனவா இல்லையா?

கனம் திரு. கோ. பூவராகன் : எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு சரியாக ஓடுகின்றன என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தயாரித்துக் கொடுக்கப்படும்.

Development of Mahabalipuram

* 18 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether it is a fact that there is a proposal to develop Mahabalipuram, as a top-class sea-side holiday resort, on the pattern of the Spanish holiday resort at Torremolinos; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : மாமல்லபுரத்தை ஒருங்கிணைந்த முறையில் அபிவிருத்தி செய்யும் திட்டம் இந்தத் துறையில் பரிசிலனையில் இருக்கிறது.

(இ) இதற்கான வேலைத் திட்ட விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சா. கணேசன் : அபிவிருத்தித் திட்டம் கவனத்தில் இருக்கிறது என்று சொல்லும்போது அங்கு இன்னும் நிறைய அறைகளைக் கொண்ட கட்டடங்கள் கட்டி ரோடையும் இன்னும் செம்மைப்படுத்தி சுற்றும்சூழ நல்ல குளிர்ச்சியான மரங்கள் செடிகொடிகள் போன்றவற்றை வைத்துப் பெரிய இடத்திற்குத் தக்க பந்தோபஸ்த்துக்களையும், அழகுகளையும் உற்பத்தி செய்து இதன் மூலமாக இன்னும் ஏராளமான வெளிநாட்டவர்கள் வந்து